Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தேசிய தினசரி
National TAMIL DAILY

போன்: 389 | தபாற் பெட்டி எண்: 49
மலர் 3 | யாழ்ப்பாணம், சார்வரி மாசி 6-ஆம் நாள் றம்ளான் 1. (17-2-61) வெள்ளிக்கிழமை | இதழ் 6

Jegajothi TOOTH POWDER
SEKAR & Co. MADURAI
ஜெகஜோதி பல்பொடி
சேகர் அன் கோ. மதுரை

# “சிறைச்சாலைகளைத் தவச்சாலைகளாக மாற்றத் தீர்மானம்”

## தொண்டர்களுக்கு தமிழரசுக் கட்சி அழைப்பு

யாழ்ப்பாணம்

**மொழியுரிமைக்காக ‘மறியல்’ இயக்கத்தில் குதித்து சிறைச்சாலைகளை தவச்சாலைகளாக மாற்ற முன்வரும்படி தமிழரசுக்கட்சியின் தொண்டர் படையினருக்கு தமிழரசுக்கட்சியின் உதவி காரியதரிசி அழைப்பு விடுத்திருக்கிருர்**

திங்கட்கிழமை ஆரம்பம்மாகுந் தமிழரசுக்கட்சியின் நேரடி நடைவக்டிகைகளின் இரண்டாவது அம்சமான மறியல் இயக்கத்துக்கான ஏற்பாடுகளை தமிழரசுக் கட்சித் தலைவர்களும் பிரமுகர்களும் சுறுசுறுப்பாகச் செய்து வருகின்றனர்.

இம்மாதம் 18 ந் திகதி சனிக்கிழமைமாலை கட்சியின் தலைமைக்காரியாலயத்திற்கு வந்து சேருமாறு தமிழரசுக்கட்சியின் தொண்டர்களுக்கு கட்சியின் உதவிக்காரியதரிசி அழைப்பு அனுப்பியிருக்கிருர்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தானும் தமிழை ஆட்சி மொழியாக்க மறுத்து சிங்களத்தையே திணிக்க முனைந்திருக்கும் அரசாங்கத்தை எதிர்த்து ஆரம்பித்திருக்கும் அறப்போர் இது என்று அந்த அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இம்மாதம் 20 ந் திகதி தொடக்கம் சட்டமறுப்பை ஆரம்பித்து தந்தை செல்வநாயகம் தலைமையில் சிறைச்சாலைகளைத் தவச்சாலைகளாக மாற்றத் தீர்மானித்திருக்கிரேம் எமது இனத்திற்காகவும் மொழிக்காகவும் நடைபெறும் இந்தப போராட்டத்தில் நீங்கள் நிச்சயம் பங்குபற்றுவீர்கள் என்று நம்புகிறேன் என்று தொண்டர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள இந்த அழைப்பில் கூறப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லா தீர்மானம்

## சமசமாஜகட்சி ஆதரிக்கும், கம்யூனிஸ்ட்கட்சி கண்டித்துப் பேசும்; வாக்களிக்காது

கொழும்பு

அரசாங்கத்தின் மீதுகொண்டு வரப்படவிருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை லங்கா சமசமாஜக்கட்சி ஆதரிக்கும். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது செவ்வாய்க்கிழமை பார்லிமெண்டில் நடைபெறவிருக்கும் விவாதத்தில் அரசாங்கத்தின் செய்கையை கம்யூனிஸ்ட்கட்சி கண்டித்துப் பேசும். என்ருலும் அரசாங்கத்திற கெதிராக வாக்களிக்க மாட்டாது.

இலஞ்சவிசாரணைக்கமிஷனல் குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்களின் அரசியல் உரிமைகளைப் பறிக்க அரசாங்கம் நடவடிக்கையெடுக்கவில்லை யென்ற குற்றச்சாட்டின் மீது அரசாங்கத்துக் கெதிராக இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப் பட்டுள்ளது. இத்தீர்மானத்தில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் திரு டட்லி சேனநாயகா, மக்கள் ஐக்கியமுன்னணித் தலைவர் திரு. பிலிப் குணவர்தன, லங்கா பிரஜா தந்திரவாதித் தலைவர் திரு. டபிள்யு தகநாயக்கா, ஜாதிக விமுக்தி பெரமுன திரு. கே. எம். இராஜரத்தின ஆகியோர் கையொப்ப மிட்டுள்ளனர்.

அரசாங்கத்தின் மீது கொண்டு வரப்படவிருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிப்பதாக தமிழரசுக்கட்சி ஏற்கனவே தெரிவித்துள்ளது.

## சிங்கள ஏட்டுச்சுவடி லண்டனில் கிடைத்தது

கொழும்பு

பௌத்தசமயம் பற்றி புத்த புத்திரா என்ற ஒரு சிங்கள எழுத்தாளரால் எழுதப்பட்ட மிகப்பழமையான ஏட்டுச்சுவடி லண்டனில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறிது.

சிங்களத்தில் எழுதப்பட்டிருக்கும் இந்த ஏட்டுச்சுவடியில் பௌத்தசமயம் பற்றிய மிகப்பழமையானதும்‘ முக்கியமானதுமான செய்திகள் அடங்கியிருபபதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது

---

## சிங்களத்தில் பரிபாஷை

தந்தி சேவைகளுக்கு உபயோகிக்கும் முகமாக சிங்கள பரிபாஷையொன்றை தயாரித்து அறிக்கை சமர்ப்பிக்க நியமிக்கப்பட்ட குழு தயாரித்துள்ள பத்திரமொன்று சனிக்கிழமை வெளியிடப்படும்.

## மகாராணி மீண்டும் இந்தியா திரும்பினர்

பாகிஸ்தானில் இரண்டுவார காலம் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு எலிசபெத் மகாராணியும் அவரது கணவர் எடின்பரோ கோமகனும் துர்க்காபாத் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் இந்தியாவில் மீண்டும் சுற்றுப் பிரயாணம் செய்வார்கள்.

துர்க்காபாத்தில் அரசியார் வந்து சேர்ந்ததும் அவருக்கு அமோக வரவேற்பு கொடுக்கப்பட்டது.

# ஐரோப்பிய தூதரகங்களில் பொலிசார் காவல்

## கொழும்பில் தொடர்ந்து ஆர்ப்பாட்டம்

கொழும்பு

கொழும்பிலுள்ள ஐரோப்பிய நாடுகளின் ஸ்தானிகர் காரியாலயங்கள் யாவற்றையும் ஆயுதந்தரித்த பொலிசார் காவல்புரிகின்றனர். ஸ்தானிகர் காரியாலயத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளின் வாசஸ்தலங்களையும் பொலிசார் காவல் புரிகின்றனர்.

காங்கோவின் சட்டபூர்வமான பிரதமமந்திரி திரு லுமும்பா கொலைசெய்யப்பட்ட செய்தி வெளியானதைத் தொடர்ந்து சர்வகலாசாலை மாணவர்கள், பௌத்த பிக்குகள், தொழிலாளர்கள் ஆகியோர் கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இந்த ஆர்ப்பாட்டம் இரண்டாவது நாளாக இன்று வியாழக்கிழமையும் தொடர்ந்து நடைபெற்றது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கேணல் மோபுத்துவின் கொடும்பாவியை ஊர்வலமாக எடுத்துச் சென்று கால்பேஸ் மைதானத்தில் வைத்து எரித்தனர் மோபுத்துவின் கொடும் பாவிஎரிக்கப்படுவதை பெருந்தொகையான மக்கள் நின்று பார்வையிட்டனர்.

கொழும்பில் லுமும்பாவின் கொலைக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் ஆர்பாட்டங்களினல் அசம்பாவிதமான சம்பவங்கள் எதுவும் நிகழாமல் தடுப்பதற்காக ஆயுதந்தரித்த பொலிசார் ரோந்து சுற்றி வருகின்றனர்.

கொழும்பிலுள்ள பெல்ஜியம் பிரான்ஸ், ரஷ்யா, பிரிட்டன், யூகோஸ்லேவியா, அமெரிக்கா ஆகிய தூதரங்களிலும் தூதரகங்களைச் சேர்ந்த அதிகாரிகளினுடைய வாசஸ்தலங்களிலும் ஆயுதந்தரித்த பொலிசார் காவல்புரிகின்றனர்.

## இரட்டை உறுப்பினர் தொகுதிகளைஒழிக்க மசோதா

புதுடில்லி

இந்தியாவில் பார்லிமெண்ட் இரட்டை உறுப்பினர் தொகுதிகளை ஒழித்துவிடுவதற்கான மசோதாவொன்று லோகசபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

ஷெடுல்ட் வகுப்பினரும் அவர்களைப் போன்ற இதர வகுப்பு மக்களும் ஒற்றை உறுப்பினர் தொகுதிகளையே விரும்புகிருர்கள் என்ற மசோதாமீதான விவாதத்தின் போது தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு

தெஹிவளை — கல்கிஸ்லை மாநகரசபை முதல்தடவையாக நேற்று கூடியது.

நகரத்தின் அபிவிருத்திக்காக முற்போக்கான பல திட்டங்களைத் தாம் கொண்டுவரப் போவதாக மேயர், மேஜர் எல். வி. குணரத்ன கூறினர்.

---

## கார்விபத்தில் ஒருவர் மரணம்

ஊர்காவற்றுறை

யாழ்ப்பாணத்திலிருந்து புங்குடுதீவு சென்றுகொண்டிருந்த கார் ஒன்று குடைசாய்ந்ததால் வயோதிபர் ஒருவர் ஸ்தலத்திலேயே மரணமானர் என்று தெரிகிறது.

அந்தக் கார் அதிக வேகம் காரணமாக குடைசாய்ந்தது என்றும் ஒரு கோணத்தில் திரும்பும்பொழுது வேகம் கட்டுப்படுத்தப்படாமையால் விபத்து நேர்ந்தது என்றும் சொல்லப்படுகிறது. கார் சாரதி விழுந்த வேகத்தில் சேற்றில் புதையுண்டார் என்றும் கூடி நின்ற ஜனங்களால் சேற்றில் நின்றும் இழுத்து எடுக்கப்பட்டார் எனவும் அவருக்கும் ஒரு கைப் பக்கம் பலத்த காயம் என்றும் கூறப்படுகிறது.

## ஏழு வருடம் கடுங்காவல்

அவிசாவளை

காவற்காரர் ஒருவரைக் கொலை செய்ததாக ஆர். ஏ. ஆரோன்சிங்கோ என்பவர் மீது குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரி குற்றவாளியென ஜூரிகள் தீர்மானித்ததால் நீதியரசர் சன்சோனி எதிரிக்கு ஏழு வருட கடுங்காவல் தண்டனை விதித்தார்.

## சர்வ கட்சித் தலைவர்கள் கண்டனக் கூட்டம்

### இன்று கொழும்பில் நடைபெறுகிறது

கொழுப்பு, வெள்ளி.

காங்கோவின் சட்டபூர்வமான பிரதம மந்திரி திரு. லுமும்பா கொலைசெய்யப்பட்டதற்கு அனுதாபம் தெரிவிக்கு முகமாக இன்று மாலை கொழும்பு கால்பேஸ் மைதானத்தில் சர்வகட்சிகளின் ஆதரவில் பொதுக்கூட்டமொன்று நடைபெறவிருக்கிறது.

இந்தக் கூட்டத்திற்கு பிரதம மந்திரியின் சார்பில் உள்நாட்டு மந்திரி திரு. மைத்திரிபாலசேனயகை தலைமை வகிப்பார். டாக்டர் என். எம். பெரேரா, திரு. பீட்டர்கெனமன், டாக்டர் கலீல், திரு. எஸ். சோமசுந்தரம், டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் ஆகியோர் பேசுவார்கள்.

## வரி விளம்பரம்

### சாதகக் குறிப்பு கண்டெடுக்கப்பட்டுள்ளது

அய்யம்பிள்ளையின் மகன் கதிர்வேலுவின் சாதகக்குறிப்பு (40 ஓலை-ஏடு எழுதியிருப்பது விஸ்வ வருஷம் பங்குனி-16) அல்லப்பிட்டிக்கு சமீபத்திலுள்ள வீதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இதன்உடைமையாளர் கீழ்க்கண்ட விலாசத்துக்கு வந்து பெற்றுக்கொள்ளலாம். A. S. ஆசாலத்தேவர், 429, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பர்ணம்.

### தேவை

தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும் தெரிந்த பெண் ஒருவர் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு மருத்துவசாலைக்குத் (Nursing Home) தேவை.

யாழ்ப்பாணத்திலுள்ள ஓர் மருத்துவசாலைக்கு மருத்துவப் பெண் ஒருவர் தேவை.

பெட்டி எண்: 16 C/o ஈழநாடு தபாற்பெட்டி எண்: 49, யாழ்ப்பாணம்.

---

தற்காலத்திற்கேற்ற முறையில் குளாய்த்தண்ணீர் வடிகால் முதலிய வசதிகளோடுஅமைந்த வீடு ஒன்று யாழ்ப்பாணத்தில் தேவை. பெட்டி எண்: 17 C/o ஈழநாடு தபாற்பெட்டி எண்: 49 யாழ்ப்பாணம்

---

அனுபவமுள்ள அச்சுக்கோர்க்கும் (கம்பாஸிட்டர்கள்) தொழிலாளர்களும், சிலின்டர்மெஷின் மைன்டர்களும் தேவை. தினசரிப் பத்திரிகையில் வேலை செய்தவர்களாயிருத்தல் சிறந்தது. நற்சாட்சிப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

மனேஜர், ஈழநாடு, தபாற்பெட்டிஎண்: 49,யாழ்ப்பாணம்.

---

ஆசிரியருக்குக் கடிதங்கள்

## கச்சேரி மாற்றச் செய்தி தவறு!

"வவனியாவிலிருந்து கச்சேரியை அகற்ற முயற்சி" என்ற தலைப்பில் 'ஈழநாடு,' 11-2-61 இதழில் வெளிவந்த செய்தியைக் கண்டேன். இது வேண்டுமென்றே செய்யப்படும் தவருன பிரசாரம். தொகுதி மக்களின் நலனே எனது இலட்சியம். தமிழ்ச் சமூகத்தைக் காட்டிக் கொடுக்கும் அளவுக்கு நான் நடந்து கொள்ள மாட்டேன்.

வவனியாவில் உள்ள கச்சேரியை முல்லைத்தீவுக்குக் கொண்டு போகும் அவசியமோ அவசரமோ எழவில்லை. வவனியாத் தென்பகுதியை மதவாச்சிக் கச்சேரியுடன் இணைக்கும் செய்தி பற்றி உரிய இடங்களில் விசாரித்தேன். அப்படி எந்த முயற்சியும் நடைபெறுவதாக நான் அறியவில்லை.

'யாழ் அகற்றுச் சங்கம்' போன்ற ஒரு சங்கம் வவனியாத் தொகுதியில் எவ்விடத்திலுமே இல்லை என்பதை வவனியா மக்கள் சார்பில், அழுத்தந் திருத்தமாகக் கூற விரும்புகிறேன்.

தா. சிவசிதம்பரம்
பார்லிமெண்ட் உறுப்பினர்
வவனியா

---

## "செய்யும் தொழிலனைத்தும் இறை வழிபாடு"

நாவலப்பிட்டி

நாவலப்பிட்டி இந்து வாலிபர் சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீகதிரேசன் கோவிலில் சங்கத் தலைவர் திரு. பொ. சின்னத்துரை தலைமையில் மகா சிவராத்திரி விழா கொண்டாடப்பட்டது.

மலாயா முன்னுள் மாதர் சங்கத் தலைவி ஸ்ரீமதி பொன்னம்மாள் கிருஷ்ண பிள்ளை தமது பேச்சிற் குறிப்பிட்டதாவது:

உடற் சுகத்துடன் வாழும் போதே பிறவிப் பயனை அடைய வேண்டும். இன்றைய சமுதாயத்தில் அநாகரிகப் பழக்க வழக்கங்கள் புகுந்து வாழ்க்கை முறையைப் பழுதடையச் செய்கின்றன. சமய வாழ்க்கையைக் கடைப்பிடித்து வாழ்க்கை முறையை செம்மைப் படுத்த வேண்டும். நாயன்மார், பெரியோர் வகுத்துள்ள வழியை நாமும் பின்பற்ற வேண்டும்.

இறைவனை அடைவதற்கு, வழிபடுவதற்கு காலம், நேரம் வயது இல்லை. அல்லது காவி உடை அணிந்து காடு செல்ல வேண்டியதில்லை. நின்றும், இருந்தும், நடந்தும், எப்பொழுதும் செய்யும் தொழில்கள் அனைத்தும் இறைவனுக்கு வழிபாடாகச் செய்ய வேண்டும். குழந்தைகளை இளமையிலிருந்தே சமய அனுஷ்டானங்களைக் கடைப்பிடிக்கும் வகையில் பயிற்சி செய்து வளர்க்க வேண்டும்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் வித்துவான் திரு. சி. செ. சோமசுந்தரம், ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா, கதிரேசன் கல்லூரி உதவி அதிபர் திரு. எஸ். வி. ஆறுமுகம் உட்பட மற்றும் பலர் பேசினர்.

### களனி பெரஹர

களனி

களனி ராஜமஹாவிகாரையில் துருத்து கொண்டாட்டம் இம்மாதம் 16-ம் தேதி நடைபெறும். வருடாந்த மகா பெரஹரா மார்ச் முதலாம் திகதி நடைபெறும்.

---

## மட்டக்களப்பு - திருமலை ரயில் பிரயாணிகளின் வசதியீனம்

திருக்கோணமலை

மட்டக்களப்புக்கும் திருகோணமலைக்குமிடையே பிரயாணம் செய்யும் ரயில் பிரயாணிகளுக்குள்ள வசதியீனங்கள் அரசாங்க அதிபர் தலைமையில் இங்குநடைபெற்ற மாவட்ட கூட்டுறவுக் கமிட்டியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

ரயிலில் முதல் வகுப்பிலேயே குழாயில் ஒருசொட்டுத் தண்ணீர்கூட இல்லாமல் இருக்கிறதென்றும், அப்படியாஞல் 3-ம் வகுப்பின் நிலைபற்றி விளக்கத் தேவையில்லை என்றும் கிழக்குப் பிராத்திய கல்வி அதிகாரி திரு. இராஜகாரியர் கூறினர்.

கொழும்பு-மட்டக்களப்பிலிருந்து திருகோணமலைக்கு ஏர்சிலோன் விமானப்போக்குவரத்தை விஸ்தரிக்க வேண்டும் என்றும் அவர் யோசனை தெரிவித்தார்.

### விமான விபத்து 70 பேர் பலி

பிரஸ்ஸல்ஸ்

பிரஸ்ஸல்ஸுக்கு வெளியே ராக்ஷஸ "போயிங்" விமானம் ஒன்று நொறுங்கி வீழ்ந்ததின் காரணமாய் அதிலிருந்து 70 பேர்கள் கொல்லப்பட்டனர். இந்தவிமானம் நியுயார்க்கிலிருந்து வந்தது.

### ரஷ்யக்கிரகம் சொன்னபடி கேட்கிறது

வாஷிங்டன்

வானவெளிக் கப்பல், ரஷ்யாவிலுள்ள நிலையங்கள் ஏவிஞெலொழிய சிமிக்கை அனுப்புவதில்லை என்றும், அதனுல் தான் அதைக் கண்காணிக்க அமெரிக்கா மேற்கொண்டுள்ள முயற்சி பலனளிக்கவில்லை என்றும் அமெரிக்க வானவெளி இலாகாவினர் தெரிவிக்கின்றனர்.

### "பிரெஞ்சு சாமான்களை பகிஷ்கரியுங்கள்"

களுத்துறை

உத்தேச அணுக்குண்டுப் பரிசோதனையை நிறுத்தும்படி ஆட்சேபிக்கும் கிழக்கு நாடுகளின் கோரிக்கையை பிரான்ஸ் அலட்சியம் செய்யுமாஞல் இலங்கை முழுதுத பிரெஞ்சு சாமான்களை பகிஷ்கரிக்க வேண்டுமென பொட்டு விலையில் நடைபெற்ற ஒருபொதுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. திரு. எச். டி. ஈ. மைக்கேல் கூட்டத்திற்குத் தலைமைவகித்தார்.

### சீனவின் பேராசை

புதுடில்லி

சமீபத்தில் சீன சபர்ப்பித்துள்ள தேச படத்தின்படி மொத்தம் 50000 சதுரமைல் இந்தியப் பிரதேசத்தின் மீது பாத்யதை கொண்டாடுகிறது. இதில் ஏற்கனவே 12,000 சதுரமைல் பிரதேசத்தை லடாக்கில் அது கைப்பிக்றியுள்ளது.

### கம்யூனிஸ்டுகளும் "தமிழ்நாடும்"

புதுடில்லி

சென்னை ராஜ்யத்திற்குத் "தமிழ்நாடு" என்று பெயரிடும்படி பார்லிமெண்டில் கோருவதென்று அங்குள்ள கம்யூனிஸ்ட் குழுவினர் முடிவு செய்துள்ளனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கும் திராவிடமுன்னேற்றக் கழகத்தின் இடதுசாரியினருக்குக்குமிடையில் உத்தேச தேர்தல் கூட்டுக்கு அடையாளமாக இந்த முடிவு இருப்பதாய்ச் சொல்லப்படுகிறது.


சுகவீனத்திற்குப் பிறகு துரித ஆரோக்கியத்தை அளிக்கவல்லது




துரித சுகம் மருந்தினுல் மட்டுமன்றி விரைவாகவே உடல் தேர்தலிலும் தங்கியிருக்கிறது. இழந்த பலத்தை துரிதமாகப்பெற உடலுக்குப் பிரத்தியேக போஷாக்குச் சக்தி அவசியமாகின்றது. சரீர வலிவுக்கும் வனப்பிற்கும் தேவையான ஊட்டச்சத்துக்களும் நெஸ்டோ மோல்ட்டில் அபரிமிதமாக உள்ளபடியால் துரித நிவாரணத்திற்குத் தேவையான பிரத்தியேகப் போஷாக்குச் சக்தியை அளிக்கக் கூடியதாகவிருக்கின்றது.

நெஸ்டோமோல்ட்

மோல்டட் மில்க்

# ஆசிய நாடுகளுக்கென ஒரு சுகாதார ஸ்தாபனம்

## சுகாதார மந்திரியின் திட்டம்

கொழும்பு

ஆசிய நாடுகளுக்கென ஒரு மத்திய சுகாதார ஸ்தாபனம் அமைப்பதற்கு சிபாரிசு செய்யும் பிரேரணையொன்றை சுகாதார மந்திரி திரு. ஏ. பி. ஜயசூரியா மந்திரி சபையிடம் சமர்பித்துள்ளார்.

மந்திரிசபை திரு. ஜயசூரியாவின்பிரேரணையை ஏகமனதாக ஏற்றுக்கொண்டிருக்கிறது.

பண்டைக்காலம் தொட்டு ஆசியநாடுகளில் இருந்து வரும் ஆயுள் வேத வைத்திய முறை போன்ற வற்றைப்பற்றி விரிவான அடிப்படையில் ஆராய்ச்சி செய்யவும், ஆயுள் வேத வைத்திய முறையை மேலும் அபிவிருத்தி செய்யலாம். இந்த ஸ்தாபனம் பெரிதும் உபயோகமாகவிருக்கும் என்று கருதப்படுகிறது:

காலஞ்சென்ற பிரதம மந்திரி திரு. எஸ். டபிள்யு. ஆர் டி. பண்டாரநாயக்கா ஆசிய நாடுகளுக்குகான சுகாதார ஸ்தாபனம் ஒன்று அமைப்பதுபற்றி ஆலோசித்து வந்ததாகவும், அதுபற்றி முதன் முதல் இந்திய ஆயுள்வேத சஞ்சிகை யொன்று ஆலோசனை கூறியிருந்ததாகவும் மந்திரி ஜயசூரியா தெரிவித்திருந்தார். காலஞ்சென்ற பிரதம மந்திரி ஆசிய சுகாதாரஸ்தாபனம் அமைப்பதுபற்றி ஆலோசித்து தமக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்படி இந்திய ஆயுள்வேத வைத்திய நிபுணரான டாக்டர் சிவ சர்மாவிடம் கேட்டுக்கொண்டார்.

பண்டிட் சிவ சர்மாபிரதமரின் வேண்டுகோளின் படி ஒரு அறிக்கையை தயாரித்து சமர்பித்தார்.

சுகாதார மந்திரியின் சிபாரிசை மந்திரிசபை ஏற்றுக்கொண்டதால், இது பற்றி இதர ஆசிய நாடுகளுக்கு அறிவித்து அந்நாடுகளின் அபிப்பிராயத்தை அறிந்து கொள்ள ஏற்பாடு செய்யப்படுமென்று தெரிகிறது.

## சக்ளா விலகுவார்

வாஷிங்டன்

வாஷங்டனிலுள்ள இந்தியத் தூதர் திரு. எம். ஸி. சக்ளா தனது பதவியிலிருந்து விலகி பார்லிமெண்ட் தேர்தலில் போட்டியிட உத்தேசித்திருப்பதாய்க் கூறினார். ஜூன் மாதம் பதவியிலிருந்து விலகப் போவதாய் அவர் கூறினார்.

---

## 5-ந் திகதி நேரு லண்டன் பிரயாணம்

புதுடில்லி

அடுத்த மாதம் 8-திகதி லண்டனில் ஆரம்பமாகவிருக்கும் காமன்வெல்த் மகாநாட்டில் கலந்துகொள்வதற்கு பாரதப் பிரதமர் நேரு அடுத்த மாதம 5-ந் திகதி புறப்படுகிறார்.

---

## ராஜன்பாபு தேர்தலுக்கு நிற்கமாட்டார்

புதுடில்லி

டாக்டர் இராஜேந்திரப் பிரசாத் மூன்றும் முறையும் இந்திய ஜனாதிபதிப் பதவிக்கான தேர்தலுக்கு நிற்க விரும்பவில்லை எனத் தெரிகிறது. மத்திய சர்க்கார் மந்திரிகள் பூர்வாங்கக் கூட்டமொன்றில் இராஜன்பாபு ஓய்வுபெற அனுமதிக்கப்பட வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்களாம். திரு. நேரு, தன் சகாக்களின் கருத்தை ஜனாதிபதிக்குத் தெரிவித்தாரா என்பது தெரியவில்லை. ஆயினும் டாக்டர் பிரஸாத் உடல் நலம் மற்றும் பல காரணங்களை முன்னிட்டு ஓய்வு பெறுவது பற்றிச் சிந்தித்து வருகிறார்.

அடுத்த ஆண்டு மே 12-ம் திகதி ஜனாதிபதியின் பதவிக் காலம் முடிவடைகிறது. அப்போது அவர் ஓய்வு பெற்றால் 12 வருடங்களுக்கு மேல் ஜனாதிபதிப் பதவியை அவர் வகித்திருப்பார். அடுத்த ஆண்டு அவருக்கு 78 வயதாகிறது.

---

## தேசிய மார்க்ஸிஸட் சங்கம்

புதுடில்லி

தேசிய மார்க்ஸிஸ்ட் சங்கம் என்ற பெயரில் முன்னாள் கம்யூனிஸ்டுகளின் ஸ்தாபனம் ஒன்று இங்கு அமைக்கப்பட்டது. வடஇந்தியாவில் உள்ள முன்னாள் கம்யூனிஸ்டுகள் மட்டும் அதில் உறுப்பினர்கள். சோஷலிஸம் அதன் இலட்சியம். பிரதமர் நேருவை தேசியத் தலைவராக அது கருதுகிறது. நேரு வழி காட்ட வேண்டும் என்றும் அது விரும்புகிறது.

---

## மாத்தளையில் அலுவிஹாரைக்கு உருவச் சிலை

மாத்தளை

திரு. டி. தம்பிராஜா தலைமையில் நடைபெற்ற மாத்தளை நகரசபைக் கூட்டத்தில், பொதுமக்களின் விருப்பத்திற்கிணங்க மாத்தளையில் திரு. பெர்னாட் அலுவிஹாரையின் உருவச் சிலை ஒன்றை நிறுவுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

---

## குளிருக்கு 15 பேர் பலி

பாட்னா

சென்ற முப்பது வருஷங்களிலேயே இல்லாத அளவுக்கு இங்கு கடும் குளிர் ஏற்பட்டு இருப்பதால் இதுவரை 15பேர் உயிரிழந்திருக்கின்றனராம்.

## தேயிலையை பவுடர் போல் தயாரிக்க யோசனை

கொழும்பு

மத்திய மலைப்பிரதேசத்தில்உற்பத்தியாகும் தேயிலையை பூரணமாகக்கரையக்கூடிய விதத்தில் பவுடராக தயார் செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்வது பற்றி அரசாங்கத்துக்கு யோசனை கூறப்பட்டிருக்கிறது.

தேயிலை ஆராய்ச்சிச்சபைத் தலைவர் டாக்டர் கன் இந்த யோசனையை வர்த்தக மந்திரியிடம் சமர்ப்பித்திருக்கிறார்.

கோப்பிப் பவுடரைப் போல் பூரணமாகக் கரையக்கூடிய விதத்தில் தேயிலையையும் பவுடராகத் தயாரிக்க முடியுமென்றும், வெளிநாடுகளில் அதற்கு அதிகமான கிராக்கி ஏற்படக் கூடுமென்றும் டாக்டர் கன் வர்த்தகமந்திரியிடம் சமர்ப்பித்துள்ள தமது அறிக்கையில் குறிப்பிட்டதாகத் தெரிகிறது.

## ஜபல்பூரில் அமைதி

இப்போது ஜபல்பூரில் சகஜநிலை ஏற்பட்டிருப்பதாயும், இதுவரை 1250 பேர் கைதாகியிருப்பதாயும் ஒரு செய்தி கூறுகிறது.

---

## குருஷ்சேவ் நன்றி

மாஸ்கோ

அமெரிக்க ஜனாதிபதி கென்னடி ரஷ்யாவின் ராக்கெட் வெற்றியைப் பாராட்டி அனுப்பிய பாராட்டுக்குச் சோவித் பிரதமர் குருஷ்சேவ் நன்றி தெரிவித்திருக்கிறார்.

# 150 பிள்ளைகள்

## ஆனால் ஆசிரியர் எவருமில்லை

ஜாயெலை

மிடலவத்தை என்னுமிடத்தைச் சேர்ந்தசுமார் 180 பிள்ளைகள் அரசியல் போட்டிகாரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளனரெனத் தெரிகிறது.

ரோமன் கத்தோலிக்க பாடசாலை சுமார் ஒரு மாதத்திற்கு முன் வித்தியாதிகாரியின் நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. சராசரி 130 பிள்ளைகள் இப்பாடசாலைக்குச் செல்கின்றனர். ஆனால் ஆசிரியர் எவருமில்லை.

இப்பாடசாலையின் தலைமை ஆசிரியர் உட்பட சகல ஆசிரியர்களும் சமீபத்திலுள்ள "தேசிய ரோமன் கத்தோலிக்க பாடசாலையில் தொடர்ந்து கல்வி கற்பித்து வருகின்றனர். பாடசாலைகள் 'முற்றுகை'யிடப்பட்டிருந்த சமயத்தில் இவர்கள் இப்பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர். இப்பாடசாலையில் சுமார் 30 பிள்ளைகள் படிக்கின்றனர். ஐந்து ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர்.

ரோமன் கத்தோலிக்கப் பாடசாலைக்கு பெற்றோர் தங்கள் பிள்ளைகளைத் தினசரி அனுப்பி வருகின்றனர். இரண்டு கன்னியாஸ்திரிகள் பிள்ளைகளைக் கவனித்து வருகின்றனர். பாடசாலைக்குத் திரும்பிச் செல்லும்படி இன்னும் ஆசிரியர்களுக்கு எவ்வித உத்தரவும் வரவில்லையாம். அரசியல் தலையீடுதான் பாடசாலை மீண்டும் திறக்கப்படாமலிருப்பதற்குக் காரணமென அக் கிராமவாசிகள் கூறுகின்றனர்.

# அமெரிக்க தகவல் நிலையம் மீது கல் வீச்சு

## கண்டியில் மாணவர் ஆர்ப்பாட்டம்

கண்டி

லுமும்பாவின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவித்தும் ஏகாதிபத்திய வாதிகளுக்கு, எதிர்ப்புத் தெரிவித்தும் கண்டியில் ஆர்ப்பாட்டம் செய்த சர்வகலாசாலை மாணவர்கள் கோஷ்டியொன்று கண்டியிலுள்ள அமெரிக்க தகவல் காரியாலயத்தின்மீது கல்வீசியது.

இரண்டு கொடும் பாவிகளைத் தாவிக்கொண்டு ஊர்வலமாகச் சென்றமாணவர்கள் இலங்கையின் மாஜி கவர்னர்களில் ஒருவாரன சேர் ஹென்றிவாக்டின் சிலையை வீழ்த்த முயற்சி செய்தனர். ஆனால் சிலையின் ஒரு சிறு பகுதி உடைந்து விழுந்தது.உடைந்த துண்டை குளத்துக்குள் வீசினர்.

இதன்பின் நடந்த பொதுக்கூட்டத்தில் சர்வகலாசாலை விரிவுரையாளர் ஒருவரும் கலந்து கொண்டார்.

## "கழகத்தை அழிக்க விடமாட்டேன்"

### அண்ணாத்துரை அறிவிப்பு

கும்பகோணம்

"எனது கடைசி மூச்சு இருக்கும் வரை திராவிட முன்னேற்றக் கழகத்தை யாரும் அழித்துவிடாது பார்த்துக்கொள்வேன்" என்று கும்பகோணத்தில் நடைபெற்ற தி. மு. கழக தேர்தல் நிதி சிறப்புக் கூட்டத்தில் பேசுகையில் திரு. சி. என். அண்ணாத்துரை கூறினார்.

"திராவிடமுன்னேற்றக் கழகத்தினர் மனதை அடக்கிக் கொள்ளப் பயிற்சி பெறவேண்டும். மனதை அடக்கியவரே உலகை ஆண்டுள்ளனர். அதுவே தமிழ்மரபாகும். மாற்றாரை அடக்க தம் மனதை அடக்கிக் கொள்வதே சிறந்தவழி" என்று திரு. அண்ணாத்துரை கூறினார்.


கல்விப் பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சை

( சாதாரண தரம் )

G. C. E. Ordinary Level

1962 டிசம்பர் — 1964 ஆகஸ்டு

இலக்கிய பாடநூல்

சுப்பிரமணிய பாரதி பாடல்

- ★ பாரததேசம்
- ★ சுதந்திரப் பெருமை
- ★ புதுமைப் பெண்
- ★ தமிழ்த் தாய்
- ★ மூன்று காதல்
- ★ நடிப்புச் சுதேசிகள்
- ★ சுதந்திரத் தேவியின் துதி
- ★ தொழில்
- ★ தமிழ்
- ★ வெண்ணிலாவே
- ★ முரசு

மாணவர்கள் எளிதில் படிக்கக்கூடிய முறையில் அரும்பதவுரைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

வியாபாரிகளுக்கு 20% கமிஷன்

இன்றே உங்கள் ஆடர்களை அனுப்பிவையுங்கள்.

விலை சதம் 75

விவேகானந்த அச்சகம் - புத்தகசாலை

விவேகானந்தாக் கட்டிடம்

யாழ்ப்பாணம்

தொலைபேசி: 517 (தொடர்புகள் 3) தந்தி: பிறின்ரேஸ்


# இஸ்ரேலிலுள்ள தூதரை இலங்கை திருப்பி அழைத்தது

கொழும்பு

இஸ்ரேலில் இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்ட சேர். ஆர்தர்ரண சிங்காவை அப்பதவியிலிருந்து இலங்கை அரசாங்கம் திருப்பி அழைத்துள்ளது.

திரு. டபிள்யு. தகநாயகா பிரதம மந்திரி பதவிவகித்த காலத்தில் ரோமில் இலங்கை ஸ்தானிகராகப் பதவி வகிக்கும் சேர்.ஆர்தர்ரணசிங்காவை இஸ்ரேலிலும் தூதுவராக நியமித்தார்.

இஸ்ரேலில் இலங்கை ஒரு தூதுவரை நியமித்ததை இலங்கையில் பல முஸ்லிம் தலைவர்கள் இதர சில தலைவர்களும் கண்டித்தனர்.

இப்பொழுது இஸ்ரேலில் நியமிக்கப்பட்ட தூதுவரை இலங்கை திருப்பி அழைத்துக் கொள்கிறது.

### ஈராக்கில் ஸ்தானிகர்

பாகிஸ்தானில் இலங்கை ஸ்தானிகராகக் கடமையாற்றும் மேஜர்ஜெனரல் முத்துக்குமாரு ஈராக்கிலும் ஸ்தானிகராக நியமிக்கப்படவிருக்கிறார்

வியாழக்கிழமை இரவு மத்திய கிழக்குக்குப் புறப்பட்டுச் சென்ற உணவு மந்திரி இலங்ரத்னவின் தலைமையிலுள்ள தூதுகோஷ்டியுடன் மேஜர் ஜெனரல் முத்துக்குமாரு ஈராக்குக்குச் சென்று தமது பதவி பிரமாணப் பத்திரங்களைச் சமர்ப்பிப்பாரென்று தெரியவருகிறது

## மாரடைப்பினால் மரணமானார்

புதுடில்லி

பல்கலைக்கழக பண உதவிக் கமிஷன் தலைவர் திரு. கிருஷ்ணை மாரடைப் பின் காரணமாக மரணமானார்.

கல்வி அமைச்சின் காரியாலயம் ஒன்றில் நடந்த விவாதமொன்றில் கலந்து கொண்ட அவர் திடீரென்று மாரடைப்பு ஏற்பட்டு மரணமானார். உபராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், கலாசார மந்திரி உமாயூன் கபூர் ஆகியவர்கள் உடனடியாக சென்று டாக்டர் கிருஷ்ணைவுக்கு இறுதி மரியாதை செலுத்தினார்கள்.

---

## நாகர் பிரதேச ஒப்பந்தம்

புதுடில்லி

அரசாங்கத்துக்கும் நாகர் பிரதேசத் தலைவர்களுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் தகுந்த முறையில் நிறைவேற்றி வைக்கப்படுமென்று லோக்சபையில் வெளிவிவகார அமைச்சின் உதவி மந்திரி திருமதி லட்சுமி மேனன் தெரிவித்தார்.

### மணிவாக்கு

உள்ளே இருக்கும் மக்கள் விழித்துக்கொண்டிருக்கும் வீட்டில் திருடர் நுழைவதில்லை. நீ விழித்துக்கொண்டிருந்தால், உன் உள்ளத்தில் தீய எண்ணங்கள் நுழைய மாட்டா.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்

ஈழநாடு
EELA NADU

யாழ்ப்பாணம் சார்வரி ஆண்டு மாசி மீ 6 உ (17-2-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna. Telegrams EELA NADU Jaffna. Phone: 389.

## அதிகரிக்கும் திருட்டுகள்

மானிப்பாயிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் திருட்டுகளும் கொள்ளைகளும் அதிகரித்துள்ளதாயும் யாழ்ப்பாண மாவட்டத்துக்குள்ளாகவே மானிப்பாயிலேதான் குற்றங்கள் மலிந்து நிலைமை மோசமாக இருப்பதாயும் ஒரு நிருபர் எழுதுகின்றார். மானிப்பாயில் மட்டுமல்ல, இலங்கையெங்குமே திருட்டு கொள்ளை பீதிகள் பொதுவாகமக்களிடையே அதிகமாக இருக்கின்றது.

இந்நிலைக்குக் காரணமென்ன? இக்காரணங்களை நீக்கி, மக்கள் திருட்டு முதலிய பயமின்றி நிம்மதியாக வாழ என்ன செய்யவேண்டுமென்பது மிக முக்கியமான கேள்விகள். 1959-ம் ஆண்டு பொலிஸ் நிர்வாக அறிக்கையில், இவ்வித குற்றங்கள் பெருகுவதற்கு வறுமையே முக்கியமான காரணமென்று பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் தெரிவிக்கின்றார். வறுமையால் விபசாரம், பிச்சை எடுத்தல் திருட்டு முதலிய பல குற்றங்கள் பெருகுவதாகக் கூறுகிறார்.

இத்துடன் வேலையில்லாக் கஷ்டம், குடி, சூதாட்டம் முதலிய பல்வேறு காரணங்களும் குற்றங்கள் பெருகுவதற்குக் காரணம் என்று மானிப்பாய் அன்பரும் கூறுகிறார். காரணங்கள் விஷயத்தில் கருத்து வேற்றுமை அதிகமிருப்பதற்கில்லை. இக்காரணங்களை நீக்குவது குறித்துத்தான் அதிக வேற்றுமைகள்.

உதாரணமாக மதுவிலக்கை எடுத்துக்கொள்வோம். புத்த தர்மத்தைப் பாதுகாக்கப் போவதாகப் பிரமாதமாகப் பேசும் மந்திரிகளும், மதுவிலக்கைப் பற்றி ஒரு வார்த்தையும் கூறவில்லை. கள்ளச்சாராயம் வடிப்பதைத் தடுக்கவேண்டுமாம்! மற்றப்படி சட்டபூர்வமான மதுபானம் நல்லதா? அதுவும் மிக அதிகரித்துள்ளது. பலவிஷயங்களில் இந்தியாவைப் பின்பற்றவேண்டுமென்று கூறும் பிரதமர், மதுவிலக்கு விஷயத்திலும் துணிச்சலுடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆனால் இதனால் மட்டும் நிலைமை சீர்பெற முடியாது. இன்றைய சமூகத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அதிகமுள்ளன. ஏழைகளும் வேலையற்றோர்களும், தங்கள் குடும்பமும் தாங்களும் உயிருடன் வாழ, தவறான வழிகளில் பிரவேசிக்கத் தூண்டப்படுவது இயற்கையே. ஆகவே, வறுமையையும் வேலையில்லாக் கஷ்டத்தையும் கூடுமானவரை நீக்க அரசாங்கம், எல்லாக் கட்சிகளின் ஒத்துழைப்பையும் பெற்று தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இது சுலபமான காரியமன்று.

செல்வந்தர்களுக்கும் இதில் ஒரு கடமையுண்டு. அனாவசியமான டாம்பீக ஊதாரிசெலவுள் செய்து வாழ்வதால், பிறருடைய தாக்குதலுக்கு அவர்கள் தங்களை உண்டாக்கிக்

# உளத் தூய்மையை அளிக்கும் புனித ரம்ழான் நோன்பு

— ஜனப் அபூபக்கர் —

**"இறைவா, உனக்காகவே நோன்புநோற்றேன். உன்னையே விசுவாசிக்கிறேன். அங்கீகரிப்பாயாக!**

**உன் பொறுப்பிலேயே எனது சகல காரியங்களையும் விடுகிறேன். உன்னுடைய ஆகாரத்தைக் கொண்டே நோன்பு திறந்தேன். நான் நோற்ற நோன்பை அங்கீகரித்துக்கொள்வாயாக!**

"இறைவா! உனக்காகவே நோன்பு நோற்றேன். உன்னையே விசுவாசிக்கிறேன். அங்கீகரிப்பாயாக!"

இன்று முதல் புனிதமான ரம்ழான் நோன்பு ஆரம்பமாகிறது. இஸ்லாத்தின் ஐம்பெரும் அனுஷ்டானங்களில் நோன்பும் ஒன்று. இந்த நோன்பு ரம்ழான் காலத்தில் அனுஷ்டிப்பதற்கென்று நல்விசுவாசிகளுக்கு அல்லாஹ்வால் அருளப்பட்டதாகும். விடியற்காலை முதல் பொழுதுசாயும் வரை உணவு, உண்டி, குடிவகை அருந்தாமலும் இச்சைகளிலீடுபடாமல் இருப்பதுமே நோன்பாகும்.

ஒருமாத காலத்திற்குப் பகல் பூராவும் உண்ணமலும், பருகாமலும் இருந்து இறைவகுத்த வழி முறைகளை மேற்கொண்டு நடப்பதன் மூலமாக வருடம் பூராவும் இஸ்லாமிய அறநெறி வழுவாது வாழும் உறுதியை உள்ளம் அடைகின்றது.

"யாராகிலும் ஒருவன் ரம்ழான் மாதம் வந்தது குறித்து சந்தோஷப்பட்டால் அவனை ஆண்டவன் நரக வேதனையிலிருந்தும் காப்பாற்றுவான்" என நபிகள் நாயகம் குறிப்பிட்டிருக்கிறார்.

நோன்பு அனுஷ்டிக்க முடியாத கர்ப்பிணி, தாய்ப்பால் கொடுக்கவேண்டிய பெண்கள், வயோதிகப் பெண்கள் ஏழை எளியவர்களுக்கு உணவளிக்க வேண்டும், மாத விலக்குக் காலங்களில் நோன்பு கூடாது.

அறிவு மயக்கத்தால் நோன்பிருக்கும்போது ஒருவர் உணவருந்தினால் அவரது நோன்பு மாசடைந்து விட்டதாக கருதப்படமாட்டாது. வாய் கொப்பளிப்பது, குளிப்பது, அலம்புவது, வாந்தி எடுப்பது போன்றவை நோன்பை இடையில் முறித்துக்கொண்டதாக மாட்டாது.

நோன்பு உடலையும் உள்ளத்தையும் ஒருங்கே தூய்மைப்படுத்தவல்லது. நல்லெண்ணம், நல்லொழுக்கம், நற்பண்பு என்பனவற்றையும் வளர்க்கிறது. அதனால் உண்மை, வாய்மை, அன்பு, பொறுமை, அஹிம்சை ஆகிய தன்மைகள் மனிதனிடத்திலே அமைகின்றன.

நோன்புகளில் பல வகை உள. ரம்ழான் மாதங்களில் அனுஷ்டிக்கப்படும் நோன்பு, விசேஷமாக நமக்கென்று அருளப்பட்ட நன்னெறியாகும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விளக்கியிருப்பது போல் நோன்பினால் மகத்தான நன்மைகளும் அனுகூலங்களும் நமக்குக் கிடைக்கின்றன.

நோன்பிருக்கும் ஒருவன் தனது உணவையும், ஆசாபாசங்களையும் அல்லாஹ்வின் ஏற்றத்திற்காகவே அர்ப்பணிக்கிறான். அவன் நோக்கும் நோன்பு அல்லாஹவுக்காகவே.

வயதில் குறைந்த சிறுவர்கள் நோன்பிருக்கவேண்டியது அவசியம் என்பதல்ல. ஆனால் அவர்களும் முன்னேற்பாடாக இதற்குப் பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும். அவர்கள் பிரார்த்தனையிலும் ஈடுபடவேண்டும். நோன்பு நாட்களில் பெரும் இழிசொற்கள், வீண் வாதங்கள், புறங்கூறல் ஆகியவற்றை விலக்கவேண்டும்.

### கொழும்பு மாநகர சபை அனுதாபம்

லுமும்பா படுகொலை செய்யப்பட்டதை முன்னிட்டு கொழும்பு மாநகரசபை ஒரு அனுதாப தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

# கண்ணோட்டம்

### அன்ன விசாரம்

'அன்னவிசாரம் அதுவே விசாரம்' என்பர். இந்த விசாரமும் இலங்கையில் மட்டுமன்றி இந்தியா முதலிய பல நாடுகளிலுமுள்ளது. இதை சமாளிக்க இரண்டு யோசனைகளை சாதுர்யமாக யாரும் கூறுவர். ஒன்று உணவு உற்பத்தியைப் பெருக்குவது, மற்றொன்று ஜனத்தொகையைப் பெருகாமல் கட்டுப்படுத்துவது.

இந்த இரு யோசனைகளைத் தவிர பஞ்சாப் கவர்னர் காட்கில் மற்றொரு யோசனையைக் கூறினார். அரசாங்கக் காரியாலயங்கள் தொழிற் சாலைகள் முதலிய பல இடங்களிலும் உணவுச் சாலைகளை அமைத்து, உதவிப்பணம் கொடுத்து உணவு மலிவாகக் கிடைப்பின் வாழ்க்கைச் செலவும் மக்கள் கஷ்டமும் குறையும். பல கோவில்கள் மூலமும் இத்த மாதிரி மலிவாக உணவளிக்கும் தர்மத்தைதச் செய்வதாயின், மக்கள்மனம் புரட்சி முதலிய வழிகளில் செல்லாமல் வெகுவாகத் தடுக்கலாம்.

அதேகூட்டதில் திரு. ஸ்ரீமதி லீலாவதி முன்ஹி மக்களில் பலர் உணவை வீணாக்குவதாயும் சத்துள்ள மற்ற உணவுகளை சிக்கனமான முறையில் தயாரித்து 'அன்னபூர்ணா' எனும் உணவுச் சாலைகளில் விற்பதாயும், ஆனால் செல்வந்தர் அங்கு வருவதில்லை என்றும், அவர்கள் உணவுகளை அதிகம் வீணாக்குவதையும் குற்றம் சாட்டினார். அதிகம் சாப்பிடுவதால், உடலுக்கு நோய்தான். இது தெரிந்த விஷயம். ஒருபக்கம் புளி ஏப்பக்காரர். மற்றோர்புறம் ஏராளமான பசிஏப்பக்காரர். இந்த நிலைமாறவேண்டும். பசிவந்தால் பத்தும் பறக்குமென்பது தமிழ் மூதாட்டியின் வாக்கு திருமதி லீலாவதி கூறியது போல் பெரிய அதிகாரிகளும் செல்வந்தர்களும், உணவில் சிக்கனம் செய்து வழிகாட்டினால் மற்றவர்களும் பின்பற்றவும், அன்ன விசாரம் ஓரளவாவது தீரவும் கூடும்.

கொண்டிருக்கின்றார்கள். ஆடம்பரமின்றிச் சிக்கினமாக வாழ்ந்து மேலதிகமான செல்வத்தைத் தர்மத்துக்கும் பொது நலத்துக்கும் அன்புடன் பயன்படுத்துபவர்கள் நாட்டுக்கு மட்டுமன்றி தங்களுக்கும் நன்மை செய்து கொண்டவர்களாவர். நமக்குத் தேவையானதை விட அதிகமாக வைத்துக் கொள்வதும் உண்மையில் திருட்டே என்று மகாத்மாகாந்தி அறிவுறுத்தியிருப்பதை இங்கு ஞாபகமூட்ட விரும்புகின்றோம்

## ஐயாறன் எழுதுவது

இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சி வருடாந்த மகாநாட்டில் ஒரு புதிய நிகழ்ச்சி சேர்க்கப்பட்டதாக, அக்கட்சியைச் சேர்ந்த நண்பர் ஒருவர் மகிழ்ச்சியுடன் வந்து கூறினார். என்னவென்று கேட்டேன்.

"இதுவரை தமிழரசுக் கட்சி மகாநாடுகளில் தெய்வப் பிரார்த்தனை எதுவும் நடந்ததில்லை. இது எனக்குப் பெரிய குறையாகத் தோன்றியது. மகாத்மா கூறிய சத்தியாக்கிரக வழியைப் பின்பற்ற முயலுகையில், அவர் கூறியபடி பிரார்த்தனையைச் செய்யாமல் விடுவது சரியல்லவென்றும், பல சமயத்தவரும் கூடிய சபையில், மௌனப் பிரார்த்தனையை ஒரு நிமிடமாவது எல்லாரும் எழுந்து செய்ய வேண்டுமென்று ஒரு தலைவரிடம் கூறினேன்.

"நல்லது இந்தப் பிரேரணையை சபையில் கொண்டு வரலாமே என்றார் அவர். ஆனால் பக்கத்திலிருந்த திரு. இராஜவரோதயம், இதற்கு பிரேரணை விவாதம் எதுவும் எதற்கு! தலைவர் கூட்டம் ஆரம்பிக்கு முன் எல்லாரும் எழுந்து ஒரு நிமிடம் மௌனப் பிரார்த்தனை செய்வோம்" என்று அறிவித்துவிட்டால், எல்லாம் சுலபமாகிவிடும். இல்லாவிட்டால் இதுபற்றி வீண்வாதங்கள் பெருகும் என்று கூறவே, தலைவரும் அப்படியே, ஒவ்வொரு கூட்டத்தையும் மௌனத்துடன் பிரார்த்தனையுடன் ஆரம்பித்தார். எனறு தெரிவித்தார் நண்பர்.

இதைக் கேட்க, எனக்குப் பெருமகிழ்ச்சி. பிரார்த்தனையால் எதுவும் சாதிக்கலாமென்றார் மகாத்மா. நாட்டுக்கு அரசியலில் விடுதலை வாங்கித் தந்த அவர், 'உணவில்லாமலுமிருப்பேன் பிரார்த்தனையின்றி அரைக்கணமும் இருக்க முடியா'தென்றார். திக்கற்றவருக்கு தெய்வமே துணை என்று நம்பினார். அவர் நம்பிக்கை வீண்போகவில்லை! நம்பினோர் நலமடைவர், தெய்வந்துணை இருப்பின் எதுதான் கைகூடாது? அரசியலில் திக்கற்ற தமிழர்க்கு இன்று தெய்வம் முன்னின்று வழிகாட்டினால், அவர்களது தியானமான உரிமைகளை பெறுவது உறுதி.

"அன்பு மிகுந்த தெய்வம் உண்டு, துன்பம் அத்தனையும் போக்கிவிடும் பாப்பா" என்று பாரதியார் கூறிய உறுதி மொழி எனக்கு ஞாபகம் வருகிறது.

* * *

ஒரு தப்பெண்ணத்தால் நேற்று மனம் மிக வேதனைப் பட்டது. ஆறுதலுக்கு வழியே இல்லை. "மனக்கவலையைமாற்ற தனக்குவமை இல்லாதான் தாள் சேரவேண்டும்" என்று திருவள்ளுவனார் கூறியதை நினைத்து பக்கத்திலுள்ள கோவிலுக்குச் சென்றேன். அங்கு ஒரு பையன், பூசை செய்வதற்காக வந்திருந்தான். முகத்தில் நல்ல பொலிவு. அடக்கமும் பண்புமே உருவான அப்பையனுடன் சிறிது பேசினேன்.

தான் இங்கிலிஷ் படிக்கவில்லை என்றும், கொக்குவில் குமாரசுவாமிப் புலவரிடம் கந்தபுராணமும், பரமேச்வரா சாஸ்திரியிடம் சமஸ்கிருதமும் படிப்பதாயும் தெரிவித்தான்.

இங்கிலிஸ் படித்தபின் நம்மில் பலருக்கும் வேலையில்லாத் திண்டாட்டமே காத்திருக்கிறது. அரசாங்க வேலை கிடைத்தாலும் அதில் எவ்வளவு கவலை. விளக்க வேண்டுமா? ஆனால் அந்தப் பையனுக்கு அவ்வித விசாரமே இல்லை. யாருக்கும் தொழுதுண்டு பின் செல்லாமல், மரியாதையாக வாழவழியுண்டு.

அப்பையனுடன் சிறிதுநேரம் பேசி, ஆண்டவனை வழிபட்டதும், மனப்பதிவு பெரிதுந் தீர்ந்தது. வீடு வந்தேன். தப்பெண்ணத்தாலேயே கவலை என்பது தெரிந்ததும், சிரித்து விட்டேன்!

# பாதுகாப்புச் சபையில் அமளி துமளி!

## காவலர்களுடன் லுமும்பா ஆதரவாளர்கள் கைகலப்பு

நியூயார்க், பிப் 15. காங்கோ நிலைமைபற்றிநேற்றுக்கூடியபந்தோபஸ்து சபைக் கூட்டத்தில்பெரிய அமளிதுமளி ஏற்பட்டது. லுமும்பா ஆதரவாளர் எனக்கூறப்படும் நீக்ரோக்கள் பலர் பாதுகாப்பு சபைக் காவலர்களுடன் கைகலந்தனர். இதைத்தொடர்ந்து பொது மக்கள் சபைகாலரியில் பிரவேசிப்பதிலிருந்து தடுக்கபட்டனர். ஏற்கனவே காலரிகளில் இருந்தவர்களும் வெளியேறறப்பட்டனர்.

### ஷோம்பே மறுப்பு

லுமும்பா மரணம் குறித்து சர்வதேசக் கமிஷன் விசாரணையை அனுமதிக்க முடியாது என கடங்கா ஜனாதிபதி திரு ஷோம்பே மறுத்திருக்கிறார்.

### ஆல்காட்தினம்

கொழும்பு

இலங்கையிலுள்ள பௌத்தர்கள் இன்றையதினத்தை ஆல்காட்தினமாகக் கொண்டாடுகிறார்கள். ஆல்காட் என்பவர் ஒரு பௌத்த தலைவராவர்.

ஆனால் பத்திரிகையாளர்கள் இதுபற்றித் தகவலறிய தாம் வசதி செய்யத்தயாராய் இருப்பதாயும் அவர் கூறினார்

நியுயார்க் செய்தி ஒன்று கூறுவதாவது: ஐ. நா.பொதுக் காரியதரிசி உடனடியாகப் பதவி நீக்கம் செய்யப்படவேண்டும் எனக்கோரும் ரஷ்யாவின் தீர்மானம் ஐ.நா மீது ரஷ்யா தொடுத்த போர் முழக்கமாகும் என்றும் காங்கோவில் போரைத் தடுப்பதில் ஐ.நா. வுக்கு அமெரிக்காவுடன் சேர்ந்து ரஷ்யாவும் ஒத்துழைப்புத்தர வேண்டுமென்றும் நேற்று பாதுகாப்புச் சபையில் தேசிய அமெரிக்க பிரதிநிதி திரு அட்லாய் ஸ்டீவின்ஸன் கேட்டுக் கொண்டார். காங்கோ பற்றி அமெரிக்கா சமர்ப்பித்த யோசனைகளை ரஷ்யா சபையில் கண்டித்தது.

காங்கோவில் சுதந்திர ஐக்கிய குடியரசை ஏற்படுத்த வேண்டுமென்றும், ஷோம்பே, மொபுடு ஆகியவர்களின் படைகளை விலக்க வேண்டுமென்றும் பிரதமர் நேரு லோக் சபையில் கூறினார். காங்கோ தலைமைக்கு பெல்ஜியம்தான் காரணமென்றும் அவர் கூறினார்.

# தகப்பனை ஏமாற்றி பணம் பறித்தாராம்

## மகன் மீது வழக்கு

குருநாகல்

சிவில் வழக்கொன்றில் தமக்கு ரூ 7,500 கிடைத்ததென்றும், அப்பணத்தை எண்ணிப் பார்க்கும் படி தனது மகனிடம் கொடுத்ததாகவும் மகன் பணத்தைத் திருப்பித்தரவில்லையென்றும் அசோசாமி என்பவர் குருநாகல் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்.

தம் மகன் தனது பணத்தைத் திருடிவிட்டதாக அவர் நீதிபதியிடம் தெரிவித்தார். வழக்கு விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது எதிரி அன்று 4 ஆயிரம் ரூபாய்க்கு அடமானத்திலிருந்த சொத்துக்களை மீட்டதாகவும் வேறு பணம் தம்மிடமில்லையென்றும் சொன்னார் வழக்கு தொடர்ந்து நடைபெறுகிறது

# ரப்பர் தீர்வையில் 8 சதம் குறைந்தது

கொழும்பு

ரப்பர் ஏற்றுமதித்தீர்வையை ருத்தலுக்கு எட்டுச் சத வீதம் அரசாங்கம் குறைத்திருக்கிறது ரப்பர் ஏற்றுமதித்தீர்வை முன்னர் ருத்தலுக்கு எட்டு சதமாக இருந்து வந்தது.

ரப்பர் தீர்வை குறைக்கப்பட்டிருப்பதனால் ஏற்றுமதியாளர்கள் திருப்தியடைந்திருப்பதாகத் தெரிகிறது.

1. தீர்வை குறிக்கப்பட்டதால் ரப்பரின் விலையை கிறிது அதிகரிக்க வசதி யேற்படக் கூடுமென்ற ஒரு வர்த்தகர் கூறினர்

## கிஸாங்காவை இந்தியா ஆதரிக்குமா?

புதுடில்லி

கொலையுண்ட காங்கோ பிரதமர் லுமும்பாவுக்கு பதிலாக கிஸாங்கா என்பவரின் தலைமையில் உருவாக்கப்பட்டிருக்கும் அரசாங்கத்தை இந்தியா ஆதரிக்குமாஎன்றுபார்லிமெண்டில் கேட்கப்பட்டபோது "அங்கு எல்லா விஷயங்களும் சிக்கல் நிறைந்ததாகவிருக்கிறது. எனவே இப்பொழுது ஒன்றும் சொல்வதற்கில்லை" என்று பிரதமர் நேரு கூறினர்.

காங்கோவில் ஐ. நா. படை இருப்பதினால் ஏதாவது பிரயோசனமிருக்கவேண்டும் இல்லையென்றால் அங்கிருந்து வெளியேறி விடுவதே புத்திசாலித்தனம் என்று நேரு குறிப்பிட்டார்,

## அணுதூசிலிருந்து பாதுகாப்பு

காபோர்னியா

வீடுகளில் அணுகதிரியக்கத் தூசிகளினால் ஆபத்து நேராமல் இருப்பதற்கு அமெரிக்க அரசாங்கம் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்துவருகிறது.

## "லாக்கப்" பில் ஆறுமாதம்

கொழும்பு

அற்புதம் பர்னண்டோ என்பவர் கடந்த ஆறுமாத காலமாக விசாரணையின்றி கும்பனித்தெரு போலிஸ் ஸ்டேஷனில் 'லாக்கப்'பில் வைக்கப்பட்டுவந்திருக்கிறார் என்று தெரிகிறது.

அற்புதம் பர்னண்டோ 34 வருடங்கள் இலங்கையில் வசித்து வந்திருப்பதாகவும் இந்தியாவுக்கு செல்ல ஒரு முறை பாஸ்போர்ட் வாங்கியதாகவும் ஆனால் போகவில்லையென்றும் சொன்னர்.

'விசா' காலாவதியான பிறகும் இலங்கையில் தொடர்ந்து வசித்துவந்தார். என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே போலிஸார் கைதுசெய்துள்ளனர் என்று தெரிகிறது. அவர் இந்தியாவுக்கு அனுப்பப்படுவாரா இல்லையா என்பது பற்றி ஒன்றும் தெரியவில்லை.

ஹொலிவூட்டுக்கு அருகில் தவுபெண்ட்ஒக்ஸ் எனும் இடத்தில் கட்டப்பட்டுள்ள புதிய வீடுகள் ஒவ்வொன்றிலும் அனுகதிரியக்கப் பாதுகாப்பு வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

# அரசாங்க இயக்கமாக மாறிவிடக் கூடாது

யாழ்ப்பாணம்.

கூட்டுறவு முன்னேற்றம் பற்றி கூட்டுறவு இயக்கத்தால் வெளியாகும் ஐக்கிய தீபம் பின்வருமாறு கூறுகிறது:-

ஆசிய நாடுகளிலும் விஷேமாகச இலங்கையிலும் பல புது முயற்சிகள் கூட்டுறவு முறையில் கையாளப்படுகின்றன. கூட்டுறவு மார்க்கம் வெற்றியடைய வேண்டுமானல் சிறந்த தகுதி வாய்ந்த நேர்மையுடைய நிர்வாகிகளும் பணியாளர்களும் அவசியம். இவர்கள் கூட்டுறவுத் தத்துவங்களையும் கொள்கைகளையும் அறிந்திருப்பதோடு விஷயங்களைத்திறமையோடு நடத்தக்கூடிய வல்லமையும் உடையவர்களாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு இயக்கத்திலும் மூன்று கட்டங்கள் உண்டு. முதலாவதாக இயக்கத்தில் சேர்ந்தவர்கள் இயக்கத்திற்காகப் பாடுபடும் காலத்தை உன்னதமான காலமெனக் குறிப்பிடலாம். இந்த உயரிய இலட்சியத்தை மறந்து தமது ஸ்தாபனத்திற்காக மாத்திரம் உழைக்கும் காலம் இரண்டாம் கட்டமாகும். இதிலும் இருந்து இறங்கி தமது உத்தியோகத்திற்காக மாத்திரம் (இயக்கத்தில் சேர்ந்தவர்கள்) காலம் போக்கும் நிலைமை ஏற்படும்போது மூன்றும் கட்டத்திற்கு நாம் செல்கிறோம். இது மிகவும் கீழ் நிலை. இந்த நிலைக்குச் சங்கங்கள் வராமல் பாதுகாத்துக்கொள்வது கூட்டுறவாளர்களின் தலையாய கடமையாகும்.

மனித வாழ்க்கை குறைகளும் நிறைகளும் மலிந்த ஒன்று கூட்டுறவுத்துறை இதற்கு விதி விலக்கல்ல கூட்டுறவு இயக்கத்தில் சேர்ந்தவர்களின் குறைகள் கூட்டுறவு இயக்கத்தையும் பாதிக்கின்றன. ஆகையால் கூட்டுறவு இயக்கம் புனிதமடைய வேண்டுமானல் அதில் சேர்ந்து பணியாற்றுபவர்கள் தமது குறைகளைக் களைந்து, பொறுமை, நேர்மை, அடக்கம், தன்னலம் கருதாமை, பொது நலம் பேணல், திறமை ஆகிய நற்பண்புகளை கடைப்பிடித்துப்பணியாற்ற வேண்டும்.

புதுத்துறைகளில் அரசாங்க உதவி அவசியமாக இருந்த போதிலும் கூட்டுறவாளர் சுய முயற்சியையும் பரஸ்பர முயற்சியையும் ஒரு காலமும் மறந்து விடக்கூடாது. எல்லாக் காரியங்களுக்கும் அரசாங்கத்தின் ஒத்தாசையையும் உதவியையும் நாம் எதிரபார்ப்போமானல் கூட்டுறவு இயக்கம் அரசாங்க இயக்கமாக மாறிவிடும். கூட்டுறவாளர் எதை விரும்புகிறார்களோ அதை அவர்கள பெறுவார்கள். கூட்டுறவு போன்ற பொதுக்காரியங்களில் கண்ணும் கருத்துமாகச் செயல் புரிபவர்கள் எதற்கும் பயப்பட வேண்டியதில்லை. முயற்சி திருவினையாக்கும்.


## எம். பிக்கு மாணவர் கோரிக்கை

நாத்தாண்டிய

நாத்தாண்டிய எம். பீ. ஹியு பர்னண்டோவிடம் தமது கல்லூரி அதிபர் இடமாற்றம் பெற்றுச் செல்லவிருப்பதைத் தடுக்கும்படி நாத்தாண்டிய மகா வித்தியாலய மாணவர்கள் கோரியுள்ளார்கள்.

கல்விப் பொதுத்தராதரப் பத்திர(சாதாரண)ப் பரீட்சை
[G. C. E.]
1962 — 1964-ம் ஆண்டு
**தமிழிலக்கியம்**
**கம்பராமாயணம் சுந்தரகாண்டம்**
**காட்சிப்படலம் நிந்தனைப்படலமும்**
**வித்துவான் க. வேந்தனர் அவர்கள்**
எழுதிய
அரும்பதவுரை, கொண்டு கூட்டு, பதவுரை,
பொழிப்புரை விளக்கம், பொருட்சுருக்கம்
ஆகியவற்றுடன்
1-3-61ல் வெளிவரும்.
இவர் எழுதிய கும்பகர்ணன் வதைப்படலத்திலும் அதிக விசேட அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.
ஆசிரியர்களும் மாணவர்களும்
வெளிவரும் திகதியை எதிர்பார்க்கவும்.
வெளியிடுவோர்:
**ஸ்ரீ லங்கா புத்தகசாலை**
234, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.

**றெனேல்ட் டோபீன்**
**கணப்பொழுதில் துரிதமே இயங்கி விடுகிறது**



RENAULT
Dauphine

வாகனப் போக்குவரத்துடேயும், முடுக்குகளிலும், நேரான இடங்களிலும் சுச்சிதமாக இயங்கி விரைந்து செல்கிறது.

இதுவே விதியினிலே வியப்பூட்டும் ரிங்காரத்துடனும் உறுதியுடனும் ஓடும் கார் உண்மையான அசல் வின் தாரகை.

4 கதவுகள் 5 ஆசனங்கள்
45 மைல்கள் ஒரு கலனுக்கு

இதன் ரகங்களில் மிகவும் சிறந்தது

ஸி. எப். ரி. என்ஜினியரிங் லிமிட்டெட்
467, யூனியன் பிளேஸ் — கொழும்பு.

GT-CFT-D-324

# ஆசிரியர் நியமனத்தில் அரசியல் தலையீடு

## முற்ருக ஒழித்துக்கட்ட ஆசிரிய சங்கம் கோரிக்கை
## சுயபாஷை வித்தியாதரிசி தெரிவில் அதிருப்தி

மட்டக்களப்பு புதன்

ஆசிரியர்களின் நியமனம், இடமாற்றம் முதலியவற்றில் அரசியல் தலையீடு முற்ருக ஒழிக்கப்பட வேண்டுமெனக் கோரும் தீர்மானமொன்று அகில இலங்கைத் தமிழாசிரிய சங்க நிர்வாக சபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

நிர்வாக சபைக்கூட்டம் மாத்தளையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு திரு. கே. வி. செல்லத்துரை தலைமை வகித்தார். ஆசிரிய சங்கத்தின் கடிதங்களுக்குக் கல்விப்பகுதி உரிய காலத்தில் பதிலளிக்கத்தவறுவதற்கு திரு. செல்லத்துரை கண்டித்தார். ஆசிரியர்களின் அரசியல், சமூக உரிமைகளைப் பாதுகாத்தல் முதலியவற்றில் சங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

பாடசாலை முகாமையாளரால் வேலைநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள்பற்றி காரியதரிசி திரு. எம். சிவநேசராசா எடுத்துக்கூறினர். வேலையிழந்த ஆசிரியர்கள்பற்றியும் மாத்தளை அர்ச் தோமையர் பாடசாலை ஆசிரியைகளின் பிரச்சினை பற்றியும் கல்வி மந்திரியையும் இதர அதிகாரிகளையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவதென நிர்வாகசபை முடிவு செய்தது.

### வித்தியாதரிசிகள் நியமனம்

"வித்தியாபகுதி சென்ற இருதடவைகளும் நடத்திய சுயபாஷை வித்தியாதரிசிகள் தெரிவில் இச்சங்கம் அதிருப்தி தெரிவிப்பதுடன் உதவி நன்கொடைபெறும் பாடசாலைத் தலைமை ஆசிரியர்கள் எவரையேனும் தெரிவு செய்யத் தவறியதற்கும் கிழக்கு மாகாணத்தைச்சேர்ந்த தமிழாசிரியர் எவரையாவது தெரிவு செய்யாததையும் இச்சபை கல்வி மந்திரியின் கவனத்திற்குக் கொண்டுவருவதுடன் இக்குறைகளை நீக்குமாறும் கேட்டுக் கொள்கின்றது" என்னும் தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேறியது.

ஆசிரியசங்கம் ஆரம்பித்திருக்கும் சகாய நிதிச் சங்க மகாசபைக் கூட்டத்தை மார்ச் மாதம் 4-ந் திகதி யாழ்ப்பாணத்தில் நடத்துவதெனவும் நிர்வாகசபை முடிவு செய்தது.

## வானெலிநிகழ்ச்சிகள்
### கொழும்பு

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**வெள்ளி 17-2-61**

காலை 6-45 உதயகீதம் 6-50 சைவ நற்சிந்தனை 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை 7-15 காலைக் கதிர் 7-30 திரை இசை 7-45 ரி. மாணிக்கவாசகர்—பக்திப் பாடல்கள் 8-15 இஸ்லாமிய கீதங்கள் பகல் 12-00 சித்திர கானம் 1-00 கதம்ப இசை

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள் 5-15 பி சுப்பு சாமி—நாகஸ்வரம் 6-15 பாங்கு 6-30 கிராம சஞ்சிகை இரவு 7-00 பக்திப் பாடல்கள் 7-30 கலை விமர்சனம் 7-45 ஆகாசவாணி அஞ்சல் 8-45 இஸ்லாமிய கீதங்கள் 9-15 இஸ்லாமிய நிகழ்ச்சி 10-00 நேயர் விருப்பம்

### திருச்சி

(செய்திகள் காலை 7-15 பகல் 2-00, இரவு 7-15)

காலை 7-30 வேதாரண்யம் ஜி. வேதமூர்த்தி— நாகஸ்வரம் பகல் 12-00 தொழிலாளர்களுக்கு 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு 1-00 மாதர் நிகழ்ச்சி 2-10 உயர்தரப் பள்ளிகளுக்கு மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்) 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7-30 சென்னை அஞ்சல் 9-15 பலகணி—சித்திரம் 9-30 மெல்லிசை மெட்டுகள்

## காரில் அடிபட்டு மரணமானர்

யாழ்ப்பாணம் வியாழன்

கரையூரைச் சேர்ந்த வைத்தியன் ஆசீர்வாதம் மோட்டார் காரில் அடிபட்டதன் விளைவாக ஆஸ்பத்திரியில் மரணமானர். இவருக்கு வயது 58.

இம்மாதம் 11--ந் திகதி இச் சம்பவம் நிகழ்ந்தது. ஆசீர்வாதம் பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்டு நேற்று காலை மரணமானர்.

பதில் சட்டவைத்திய அதிகாரி டாக்டர் சிவஞானசுந்தரம் பிரேத பரிசோதனை நடத்தினர்.

மரணவிசாரணை நடத்திய திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் ஜே. பி. யு. எம். காரைச் செலுத்தியதாகக் கருதப்படும் தின்னவேலியைச் சேர்ந்த எஸ். சிங்காரவேலு என்பவரை ஆயிரம் ருபா பிணையில் செல்ல அனுமதித்து இம்மாதம் 20-ந்திகதி யாழ்ப்பாண நீதிவான்முன் தோன்றவேண்டுமென உத்தரவிட்டார். புலன்விசாரணை நடத்துமாறும் உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் திரு. கனகரத்தினம் பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

## தமிழ் அரசாங்க ஊழியர் சங்க கூட்டம்

கொழும்பு

தமிழ் அரசாங்க ஊழியர் சங்கத்தின் கூட்டமொன்று இம்மாதம் 19ந் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

—

## கானு அங்கீகாரம்

கொழும்பு

காங்கோவில் ஸ்டான்லிவில்லியில் லுமும்பா ஆதரவாளர்கள் கியாங்காவின் தலைமையில் அமைக்கப்பட்ட அரசாங்கத்தை கானு அங்கீகரித்திருக்கிறது.

## ரயில் என்ஜின் சாரதி தாக்கப்பட்டார்!

கொழும்பு

போலவத்தை - கொழும்பு ரயிலில் பிரயாணம் செய்த பிரயாணிகள் சிலர், ரயில் திடீரென நின்றதும் ரயில் சாரதியை நையப்புடைத்துவிட்டனரென்று ஒரு செய்தி கூறுகிறது. ஹுனுப்பிட்டியில் இச் சம்பவம் நடைபெற்றது.

ரயில் திடீரென நின்றதற்குத் தண்ணீர் முடிவடைந்தது தான் காரணமென ரயில் என்ஜின் சாரதி தெரிவித்தார். சாரதி கூறிய விளக்கத்தைப் பொருட்படுத்தாமல் பிரயாணிகள் அவரைத் தாக்கினராம்.

இதன் பின்னர் ரயில்வே மனேஜர் திரு. பி. டி. ரம்பாலா ஸ்தலத்திற்குச் சென்று விசாரணை நடத்தினர்.

## பெல்ஜியத்துடன் ராஜீய உறவைத் துண்டிக்கவும்
### அரசாங்கத்துக்கு கோரிக்கை

கொழும்பு வியாழன்

பெல்ஜியத்துடனுள்ள ராஜீயத் தொடர்புகளை இலங்கை துண்டித்துக் கொள்ள வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானமொன்றை லுமும்பாவின் மரணத்திற்கு அனுதாபமும் 'ஏகாதிபத்திய வாதிகளுக்கு' எதிராக ஆர்ப்பாட்டமும் செய்த மாணவர்களும் பிக்குகளும் நிறைவேற்றினர்.

கொழும்பிலுள்ள பெல்ஜியம் தூதரகத்தின் முன் ஒரு நாள் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்திய மாணவர்கள் மாலையில் நகரமண்டப மைதானத்திற்கு ஊர்வலமாகச் சென்று பொதுக் கூட்டம் ஒன்று வைத்தனர்.

ஸ்ரான்லிவில்லியில் நிறுவப்பட்டுள்ள லுமும்பா ஆதரவாளரின் அரசாங்கத்தை இலங்கை அரசாங்கம் உடனடியாக அங்கீகரிக்க வேண்டுமென்று கோரும் தீர்மானமும் ஐ. நா. பொதுக் காரியதரிசி பதவியிலிருந்து திரு. ஹமர் ஷீல்ட் விலக்கப்படவேண்டுமென்று கோரும் தீர்மானமும் இக்கூட்டத்தில் நிறைவேறின

## பிச்சை எடுக்க உரிமைகேட்டார்

மைசூர்

திடகாத்திரமான தேகமுடைய ஒருவர் மைசூர் உதவி உள்நாட்டுமந்திரி திரு. பசவலிங்கப்பாவின் காரியாலயத்திற்குள் வந்து பிச்சை எடுப்பதற்கு லைசன்ஸ் தரவேண்டுமென்று கேட்டாராம். பிறகு விசாரித்ததில், அவரது மகன் ஐ. ஏ. எஸ். அதிகாரியாக இருப்பது தெரியவந்ததாம். அவர் கூட மற்றொரு காரியத்துக்காக வந்த மற்றொருவர், ஒரு கல்லூரிப் பேராசிரியரின் தந்தை.

பிச்சை எடுப்பது தங்களது பரம்பரைக்குலத்தொழில் என்றும் சாதாரண பிச்சைக்காரர்களைப்போல பொலிசார் பிடித்து பிச்சைக்காரவிடுதிக்கு அனுப்பாமல் இருப்பதற்கே லைசன்ஸ் கேட்பதாகவும் அவர்கள் வாதாடினர்

பிச்சை எடுப்பதை எந்த உருவத்திலும் தடுக்கவே அரசாங்கம் விரும்புவதாக மந்திரி கூறினர்.


கம்பீரமாகத் தோற்றமளிக்க

**மௌலானு சாரங்களை**

அணியுங்கள்.




மௌலான (சிலோன்) லிமிட்டெட்

கொழும்பு கண்டி



தேசிய தினசரி **ஈழநாடு** சந்தா விபரம்

| | தபாற் செலவுடன் | ஏஜெண்டுகள் மூலம் |
| --- | --- | --- |
| ஒரு வருடம்: | ரூ. 45-00 | ரூ. 36-00 |
| 6 மாதம்: | ரூ. 22-50 | ரூ. 18-00 |
| 3 மாதம்: | ரூ. 12-00 | ரூ. 10-00 |

மூன்று மாதத்துக்குக் குறைந்த சந்தாதாரர்களாகச் சேர விரும்புவோர் சமீபத்திலுள்ள ஏஜெண்டுகளிடம் சந்தாவைச் செலுத்தும்படி கேட்டுக்கொள்கின்ருேம்.

**ஈழநாடு**

63, சிவன் கோவில் மேலை வீதி,
தபாற் பெட்டி எண்: 49,
யாழ்ப்பாணம்.

# "தேசிய கல்வித் திட்டத்தில் ஏழை பணக்காரன் வித்தியாசமில்லை"

## வெலிகமையில் மந்திரி மகாநாமசமரவீரா பேச்சு

"ஒலிபெருக்கித் தடையை மீற நான் விரும்பவில்லை." இவ்வாறு வெலிசம பரிசளிப்பு விழாக் கூட்டமொன்றுக்குத் தலைமைவகித்த ஸ்தலஸ்தாபன விடமைப்பு மந்திரி திரு. மகாநாமசமரவீரா குறிப்பிட்டுத் தமக்கு முன்னால் நிறுத்தப்பட்டிருந்த ஒலிபெருக்கியை அப்பால் ஒதுக்கினார்.

அவருக்கு முன் பேசிய வழக்கறிஞர் திரு. எச். டபிள்யூ. குணசேகரா, மெடிகமஹேம ரத்னதேரோ ஆகியோர் ஒலிபெருக்கியை உபயோகித்தனர். மந்திரி தமது பேச்சிற் குறிப்பிட்டதாவது:

"ஒரே முறையான தேசியக் கல்வித் திட்டத்தை மேற்கொள்வதானால் சகல உதவி பெறும் பாடசாலைகளையும் எடுத்து ஒரே நிர்வாகத்தில் அமைப்பதுதான் வழி. தேசியக் கல்வி முறையில்தான் நாட்டின் முன்னேற்றம் தங்கியிருக்கிறது. பணக்காரர்களின் குழந்தைகளுக்கும், ஏழைகளின் குழந்தைகளுக்கும் சமசந்தர்ப்பம் கிட்டுவது இதனால் சாத்தியமாகும். முன்பெல்லாம் பணக்காரரின் குழந்தைகளுக்கு மட்டுமே உயர்தரக் கல்வி ஏகபோக உரிமையாய் இருந்தது. ஆனால் இன்றைய நிலை மாறிவிட்டது

திரு. டி. எஸ். சேனநாயக்காவும் இதர தலைவர்களும் சுதந்திரப் போராட்டத்தில் சிறைவாசம் அனுபவித்தது உண்மையாயிருக்கலாம். ஆயினும், காலஞ்சென்ற பண்டாரநாயக்காவின் தலைமையிலேதான் நாட்டுக்கும் மக்களுக்கும் உண்மையான சுதந்திரம் கிடைத்தது.

நாட்டு மக்கள் இப்போது சோஷலிசப் பாதையை நோக்கி முன்னேறுகிறார்கள். சிங்களம் அரசாங்க மொழியாக்கப்பட்டிருக்கிறது. பணக்காரர்களுக்குவரிவிதித்து ஏழைகளுக்கு உதவுவதே அரசாங்கத்தின் கொள்கை.

### 22-ம் தேதி விசாரணை

பண்டாரநாயக்கா கொலை வழக்கு பெப்ரவரி 22-ம்தேதி புதிய ஜூரிகளின் முன்னிலையில் விசாரணைக்குஎடுத்துக் கொள்ளப்படும்.

---

### ஜாவாவில் தங்கம்

ஜகார்த்தா

மேற்கு ஜாவாவிலுள்ள ஒரு இடத்தில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக பத்திரிகை செய்திகள் கூறுகின்றன. அரசாங்க அதிகாரிகள் தங்கம் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து தங்கம் சேகரிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

### இளைஞருக்கு படுகாயம்

காலவெல

தம்புல்லைக்கு அருகில் சைக்கிளில் போய்க்கொண்டிருந்த ஒரு இளைஞர் மீது லொறியொன்று மோதியதால் அவர் படுகாயம் அடைந்தார். அவரை முட்டித்தள்ளிய லொறியைக் கண்டுபிடிக்க பொலிசார் முயன்று வருகிறார்கள். காலமடைந்தவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

### இந்தியாவில் ராஜ குடும்பம் பிரிட்டனின் சிரத்தை

லண்டன்

பிரிட்டிஷ் அரசகுடும்பத்தினரின் இந்திய சுற்றுப்பிரயாணத்தில் லண்டன் வாசிகள் அதிக சிரத்தைகாட்டி வருகிறார்கள். காமன்வெல்த் கழகத்தில் வைக்கப்பட்டிருக்கும் இராஜ குடும்பத்தினரின் சுற்றுப் பிரயாணப் படங்களைப் பாடசாலைக் குழந்தைகள் உட்பட பெரும் ஜனக்கூட்டம் பார்த்து மகிழ்ந்தவண்ணம் இருக்கின்றன். இராஜ குடும்பத்தினரின் சுற்றுப்பிரயாணம் இந்திய இளைஞர்களுக்கும் மிகவும்சிரத்தையைக் கொடுத்திருப்பதாக காமன்வெல்த் கழக அங்கத்தினர் ஒருவர் கூறினர்.

---

### மருத்துவ தாதிகள் மகாநாடு

யாழ்ப்பாணம்

அகில இலங்கை சுகாதார இலாகா தொழிலாளர் சங்க மருத்துவதாதிகள் மகாநாடு, 19-2-61 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். சுகாதாரஇலாகா உதவி அதிபர் டாக்டர் பி. இராசசிங்கம் இந்த மகாநாட்டை அரசினர் சிங்களப் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பித்துவைப்பார்.

அதேதினம் மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணக் கிளையின் வருடாந்த மகாநாடு யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில்நடைபெறும். டாக்டர்ஜி.என்.ஆர்.நதானியல் டாக்டர் எம். கனகரத்தினம், உதவி சுகாதார மந்திரி திரு. ஜே. பி. ஒபயசேகரா, திரு. அல்பிரட்துரையப்பா எம். பி. டாக்டர் என். எம். பெரேரா எம். பி., திரு. அனில்குமார் முனசிங்க எம். பி., திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் எம்.பி., திரு. அ. அமிர்தலிங்கம் எம்.பி., மேயர் திரு. டி. எஸ். துரைராசா ஆகியோர் இம்மகாநாட்டில் பங்குபற்றுவார்கள்.

# 'தொழிலாளருக்காகவே போராடி வருகிறோம்'

## எமிங்போர்ட் தோட்டத்தில் தொண்டமான் பேச்சு

எட்டியாந்தோட்டை

"தொழிலாளருக்கு எந்தவித பேதமுமின்றிப் பணியாற்றி வருவதுடன் இந்த நாட்டில் நீண்ட காலமாக வாழ்ந்து உழைத்து வரும் இந்தியப் பரம்பரையினர்களுக்காகவும் நாம் பாடுபட்டு போராடி வருகிறோம். தொழிலாளருக்கு எத்தனையோ சங்கங்கள் தாம் தொண்டாற்றுவதாகச் சொல்லிக் கொண்டாலும் நமது பரம்பரையினம் தொழிலாளர் என்பதை உணர்ந்து அவர்களுக்காக உதவியும் பணியும் புரிந்து வரும் இயக்கம் நமது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்தான் என்பதை எவரும் மறுத்துவிட முடியாது" இவ்வாறு எமிங்பொர்ட் தோட்டத்தில், திரு. கே. ஜீ. எஸ். நாயர் தலைமையில் நடைபெற்ற இ. தொ. கா. தொழிலாளர்களின் பொதுக்கூட்டத்தில் பேசிய திரு. எஸ் தொண்டமான் எம். பி. கூறினர். கூட்டத்தில் திருவாளர்கள் பொன்னையா, அவிசாவலை பிரதிநிதி முத்தையா, டி. எம். பீர்முகமது, மாதர் சங்கத்தைச் சேர்ந்த திருமதி மாரியம்மா ஆகியோரும் பேசினர், முதலில் தலைவர் திரு. தொண்டமான் பேசும்போது கூறியதாவது:

"தொழிலாளரின் உரிமைப் பிரச்சினை எழுந்த காலங்களிலெல்லாம் நாம் அதற்காகப் பெரும் தொண்டும் தியாகமும் புரிந்திருக்கிறோம்! நமது தோழர்களிலே பலர் கஷ்ட நஷ்டங்களை ஏற்றிருக்கின்றனர். அவர்கள் ஏற்ற தொல்லைகளும் தியாகங்களும் வீண் போகவில்லை".

### விஷமருந்தித் தற்கொலை

ஊர்காவற்றுறை புதன்

சரவணைக் கிராமத்தைச் சேர்ந்த தலைகாட்டி என்னுமிடத்தில் வசிக்கும் பொன்னையா திருநாவுக்கரசுவின் மகள் தர்மச் செல்வி (15 வயது) நேற்று முன் தினம் விஷம் அருந்தி மரணமானார். மரணவிசாரணையில் விஷம் அருந்தி தற்கொலை செய்து கொண்டதாகத் தீர்ப்பளிக்கப்பட்டது.

---

### வழக்குத்தொடர மாஜி மேயர் யோசனை

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண நகரின் முன்னாள் மேயர் திரு. அல்பிறட் துரையப்பா, மாநகரசபையின் பணத்தை அனாவசியமாகச் செலவுசெய்ததாக தற்போதைய மேயர் திரு ரி. எஸ். துரைராஜா சமீபத்தில் ஒரு அறிக்கையில் குற்றம் சாட்டியிருந்தார்.

மேயர் திரு. துரைராஜாவின் குற்றச்சாட்டு சம்பந்தமாக அவர்மீது மான நஷ்ட வழக்குத்தொடர்வதற்கு திரு. துரையப்பா வழக்கறிஞர்களுடன் ஆலோசனை நடத்திவருவதாக அறியப்படுகிறது.

# பஸ்சேவை விருத்திக்கு புதிய திட்டம்

கொழும்பு

நாட்டின் பலபாகங்களிலும் தனித்தனியாக நிர்வாகப் பகுதிகள் ஏற்படுத்தி அவைகளிடம் அப்பகுதிகளில் பஸ் போக்குவரத்து நடத்தும் பொறுப்பை ஒப்படைப்பது பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

பஸ் போக்குவரத்துச் சேவையை அபிவிருத்தி செய்யவும் போக்குவரத்து சேவையினால் ஏற்படும் பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்கவும் இப்புதிய திட்டம் உதவும் என்று கருதப்படுகிறது.

தற்பொழுது பஸ் போக்குவரத்துச் சேவை நிர்வாகம் பொறுப்பு கொழும்பிலுள்ள மத்திய நிலையத்தினிடமே இருந்து வருகிறது. இந்தப் பொறுப்பை நாட்டின் பல்வேறு பாகங்களிலும் ஏற்படுத்தப்படும் உப நிலையங்களிடம் பிரித்துக் கொடுப்பதே அரசாங்கத்தின் புதிய திட்டமாகும். அப்படி அமைக்கப்படும் உப நிலையங்களில் திறமையாக இயங்குபவைகளில் வேலை செய்யும் ஊழியர்களுக்குப் போனஸ் வழங்கத் திட்டமொன்றை ஏற்படுத்துவதின் மூலம் பஸ் சேவையைத் துரிதமாக அபிவிருத்தி செய்யவும் அரசாங்கம் யோசித்துவருகிறது.

உத்தேச புதிய திட்டம் அமுலுக்கு வருமானால் தற்பொழுது பஸ் சேவைகளில் உள்ள குறைபாடுகளைக் கண்டுபிடிக்கவும், அவைகளை நிவர்த்தி செய்யவும் வசதியாகவிருக்குமென்று கருதப்படுகிறது.

### பிள்ளைகளுக்கு இன்னும் தெரியாது

கெய்ரோ

படுகொலை செய்யப்பட்ட காங்கோ பிரதமர் பாட்ரிக்ஸ லுமும்பாவின் மூன்று பிள்ளைகள் கெய்ரோவில் இருக்கின்றனர். திரு. லுமும்பாவின் மரணம் குறித்து அப்பிள்ளைகளுக்கு இன்னும் ஒன்றுமே தெரியாது.

---

### ரூ. 300 அபராதம்

கம்பஹா

இ. போ. ச. ஒன்றில் சாராயம் கொண்டு சென்றதாக மைக்கல் சில்வா என்பவரை கலால் இன்ஸ்பெக்டர் வீரசூரியா கைது செய்து கம்பஹா நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்தார். நீதவான் எதிரிக்கு ரூ. 300 அபராதம் விதித்தார்.

---

### அப்பீல் தள்ளுபடி

கொழும்பு

உத்தரவு இல்லாமல் சாராயம் விற்றதாகநாரம்பிட்டியைச் சேர்ந்த எச். ஏ. பீரிஸ் என்பவருக்கு கொழும்பு முனிசிப்பல் நீதவான் விதித்ததண்டனையை ஆட்சேபித்து எதிரி தாக்கல் செய்த அப்பீல சுப்ரீம் கோர்ட்டில் தள்ளுபடிசெய்யப்பட்டது.

---

### கானாவும் அங்கீகரித்தது

காங்கோவில் லுமும்பா ஆதரவாளர்கள் கிஸாங்கா என்பவரின் தலைமையில் அமைத்துள்ள அரசாங்கத்தை கானா அரசாங்கமும் அங்கீகரித்திருக்கிறது.

---

### புசலாவையில் சிவராத்திரி

புசலாவ

புசல்லாவைக் கடை வீதியில் யாழ்ப்பாணவாசிகளால் நடத்தப்படும் மகாசிவராத்திரிஉற்சவம் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் வெகுவிமரிசையாக, நடைபெற்றது.

உற்சவத்தில் பரதநாட்டியம், காவடியாட்டங்கள், வாண வேடிக்கை முதலியவை விசேட நிகழ்ச்சிகளாக இடம்பெற்றன.

---

### மத்திய கிழக்கு செல்லும் தூதுகோஷ்டி

கொழும்பு பெப்.19

வர்த்தக மந்திரி திரு டி. பி. இலங்கரத்ன தலைமையில் வர்த்தகத் தூதுகோஷ்டி ஒன்று இன்றிரவு மத்திய கிழக்கு நாடுகளுக்குப் புறப்பட்டுச் செல்கிறது. இலங்கைத் தேயிலை பற்றி மத்திய கிழக்கு நாடுகளில் இத்தூதுகோஷ்டி முக்கியமாக ஆராயும்.




ஏக விநியோகஸ்தர்கள்:

செட்டிநாட் (பிரைவேட்)

116/118 கெய்சர் வீதி.

# நாட்டை வளமாக்கச் சிறு கைத்தொழில்

## மெழுகுக் காகிதத்தில் உறிஞ்சு குழாய்

**சிறுகைத்தொழில்கள்மூலம் நாட்டின்பொருளாதார வளத்தை விருத்தி செய்வதில் பல நாடுகள் இன்று உற்சாகத்துடன் முயன்று வருகின்றன. மெழுகுக் காகிதத்துடனும் சிறு இயந்திரங்களுடனும் இலகுவான ஒரு தொழிலைச் செய்வதற்கான யோசனையை 'ஆத்திரேயன்' இங்கு கூறுகின்றார்.**

கடைகளில் குளிர்ந்த பானங்களை நாம் அருந்தும்போது கடைமுதலாளி விலை இல்லாமல் ஓர் உறிஞ்சுக் குழாயை போத்தலிலோ, டம்ளரிலோ இட்டுத்தருகின்றார். பானத்தை உட்கொண்டு முடிந்தவுடன் மிக அலட்சியமாக நாம் அக்குழாயை முறித்து விடுகின்றோம். எச்சிப்பட்ட குழாயை வேறொருவர் உபயோகிக்கக் கூடாது என்ற யோசனையில்.

சர்வசாதாரணமாக எல்லோரும் உபயோகிக்கும் இவ்வுறுஞ்சு குழாய்கள் முழுவதும் வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன. இங்கு இனுமாக விநியோகிக்கின்றோம். அங்கிருந்து பணம் கொடுத்தே வாங்குகின்றோம். நம்நாட்டுத் தேவை முழுவதையும் நம் பகுதியிலேயே உற்பத்தி செய்ய முடியாதா? இதனால் நம்பகுதிகளின் வளம் பெருகும். நாடும் நலமுறும்.

### மிக இலகுவான தொழில்

இவற்றைச் செய்வதற்கு வேண்டிய மூலப்பொருள் ஒருவித மெழுகுக் காகிதமே. இவற்றை உருட்டி, வெட்டி ஒட்டத் தகுந்த சிறு இயந்திரங்களும் தேவை. இவற்றை அழகான அட்டைப் பெட்டிகளிலடைத்து சிறந்த முறையில் விற்பனை செய்வது மிக இலகுவான காரியம்போல் எனக்குத் தோன்றுகின்றது.

இத்தொழிலை ஆரம்பிப்பதற்கு அதிக முதல் தேவைப்படாது. ஒரு தனித்த சிறு முதலாளியே நடாத்தக் கூடிய தொழில். ஆரம்பத்தில் தேவையான மெழுகுக் காகிதங்களை வெளிநாட்டிலிருந்தே வரவழைத்துக் கொள்ளலாம். பின்னர் நம்நாட்டுக் காகிதத் தொழிற்சாலை இத்தேவையை பூர்த்தி செய்யக்கூடிய வழிவகைகளை ஆராயலாம். இம்முயற்சிக்குத் தேவையான இயந்திர வசதிகளையும், ஆலோசனைகளையும் பெற வசதிகளுள்ளன. விரும்புவோர் ஆசிரியர்க்கு எழுதலாம்.

இது மிகச் சிறிய ஒரு முயற்சிதான். எனினும் இச்சிறிய கைத்தொழிலில் நம்நாடு ஈடுபட்டு உழைத்தால் என்ன? மேலும் உழைத்துத் தொழில் செய்வதில் நல்ல ஊதியமிருக்கின்றது என்பதைப் பொது மக்களுக்குக் காட்ட இது ஒரு நல்ல பிரயத்தனம். இதனைக் கண்ட பின்னர் மக்களே பல்வேறு தொழில் முயற்சிகளில் ஈடுபடத்துணிவார்கள்.

### நல்ல அறிகுறி

நாடு வளமடைய ஒருவித போட்டி மனப்பான்மையுடன் துரிதமாக இச் சிறு தொழில்களை தோற்றுவித்து இயக்கினால் நல்லது. நாம் செய்யாதுவிடின் மற்றயோர் செய்யாதிருப்பார்கள் என்று நம்பவும் இடமில்லை. நம் நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள மக்கள் தேசிய உணர்ச்சியுடன் தொழில் துறைகளில் மிக வேகமாக முன்னேறுகின்றார்கள் போல் எனக்குத் தோன்றுகின்றது. நாட்டின் பொருளாதார விருத்திக்கு இது ஒரு நல்ல அறிகுறி. இத்துறையில் நாம் எமது பங்கைச் செய்யலாமே!

## காங்கோவில் ஐ. நா. படைக்கு அதிக அதிகாரம் அளிக்கவேண்டும்

### ராஜ்யசபையில் நேருஜி பேச்சு

புதுடில்லி

காங்கோவில் மீண்டும் சகஜநிலைமை ஏற்பட வேண்டுமானால் அங்குள்ள ஐ. நா. படைகளுக்கு புதிய அதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டுமென்று பாரதப் பிரதமர் திரு. நேரு ராஜ்யசபையில் கூறினார்.

காங்கோவில் ஐ. நா. படைகள் ஸ்திரமாக செயல்பட முடியாவிட்டால் அவை அங்கு இருப்பதினால் பயனில்லை. ஐ. நா. படையினால் அங்கு ஆக்கமான முறையில் செயல்பட முடியாவிட்டால் அவை அங்கு இல்லாமலிருப்பதே நல்லது! என்று திரு. நேரு சொன்னார்.

காங்கோவிலிருந்து பெல்ஜியம் வெளியேற வேண்டுமென்றும் மொபுட்டுவின் படைகளை நிராயுதபாணியாக்க வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐ. நா படைகள் காங்கோவில் ஸ்திரமான இராணுவ நடவடிக்கையில் இறங்கவேண்டியது அவசியமென்றும், ஐ. நா. படைகளுக்கு இந்தியா தன்னால் இயன்ற உதவிகளை அளிக்கக்காத்திருக்கிறது என்றும் நேருஜி தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

ஐ. நா. பந்தோபஸ்து சபை அடுத்த சில தினங்களில் கூடி காங்கோ விஷயமாக ஒரு முடிவுக்கு வருமென்று இந்தியப் பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார்.

## பேடன் பவல் சீமாட்டி இலங்கை வருகிறார்

கொழும்பு

உலகசாரண இயக்கத்தலைவர் பேடன் பவல் பிரபுவின் மனைவியான பேடன் பவல் சீமாட்டி, வருகிற 28-ம் திகதி இலங்கை வருகிறார். இங்கு தங்கியிருக்கும்போது அவர் பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயகாவின் விருந்தினராய் இருப்பார்.

---

### மப்பும் மந்தாரமும்

நேற்றெல்லாம் யாழ்ப்பாணத்தில் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. இலங்கையின் பல பகுதிகளில் மழை பெய்தது.

**இணையற்ற 2-வது மாதம்!**

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) **விஜயா** (மட்டக்களப்பு) **வெம்பிளி** (கண்டி)

மற்றும் பத்து திரைகளில்

★ எண்ணற்ற இரசிகர்களின் இதயத்தை ஈர்ந்த இன்பக்காவியம்!


★ தாய் அன்பிற்கு இணையாக தரணியில் எதுவும் கிடையாது என்பதை சித்தரிக்கும் இலட்சிய ஓவியம்!!

தென்னிந்தியாவில் 100-வது தினத்தை வெற்றியோடு கொண்டாடிய போதும் இன்னும் இரசிகர் கூட்டம் பெருகி எங்கு பார்த்தாலும் "கைராசி"யின் கதையாகவே இருக்கிறது!


உண்மையை அறிய இன்றே பாருங்கள்!

முகராசியுள்ள **ஜெமினி கணேசன்** எழில்ராசியுள்ள **பி. சரோஜாதேவி**

மற்றும்



சகஸ்ரநாமம்
எம். வி. ராஜம்மா
எம். ஆர். ராதா
கே. மாலதி
தங்கவேலு
மோகனா
கே. டி. சந்தானம்
நடித்த



வாசு பிலிம்ஸ்

# கைராசி

டைரக்ஷன்: கே. சங்கர்

இசை அமைப்பு: ஆர். கோவர்த்தனம்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.